
# சுட்டு




101

அக். '89

ரூ.1

உள்ளே: வங்கி மோசடிகள்

FREE E - BOOKS , www.thamizham.net.,

அட்டைப்பட விளக்கம்:-

# வங்கி மோசடிகள்

| வங்கியின் பெயர் | 1985 | | 1986 | | 1987 | |
|---|---|---|---|---|---|---|
| | மோசடிகளின் எண்ணிக்கை | தொகை (கோடிக் கணக்கில்) | மோசடிகளின் எண்ணிக்கை | தொகை (கோடிக் கணக்கில்) | மோசடிகளின் எண்ணிக்கை | தொகை (கோடிக் கணக்கில்) |
| பாரத ஸ்டேட் வங்கியும் அதன் கிளைகளும் | 635 | 20.57 | 664 | 10.41 | 774 | 13.57 |
| அலகாபாத் வங்கி | 95 | 0.46 | 60 | 3.87 | 33 | 0.14 |
| ஆந்திர வங்கி | 34 | 19.67 | 14 | 0.12 | 22 | 0.20 |
| பேங்க் ஆப் பரோடா | 82 | 0.42 | 80 | 3 62 | 97 | 1.65 |
| பேங்க்ஆப் இந்தியா | 110 | 1.17 | 104 | 0.77 | 100 | 1.62 |
| பேங்க் ஆப் மகாராஷ்டிரா | 36 | 0.14 | 18 | 3.19 | 33 | 0.16 |
| கனரா வங்கி | 157 | 0.21 | 132 | 1.62 | 141 | 1.64 |
| சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா | 107 | 1.17 | 90 | 3.47 | 91 | 7.05 |
| கார்ப்பரேஷன் வங்கி | 50 | 0.88 | 16 | 0.55 | 11 | 0.07 |
| தேனா வங்கி | 59 | 0·79 | 44 | 0.75 | 28 | 3.08 |
| இந்தியன் வங்கி | 60 | 1.01 | 37 | 0.17 | 23 | 0.63 |
| இந்தியன் ஓவர்சீஸ் வங்கி | 77 | 0.48 | 83 | 0.32 | 44 | 1.81 |
| நியு பேங்க் ஆப் இந்தியா | 16 | 0.17 | 25 | 1.33 | 13 | 0.24 |
| ஓரியண்டல் பேங்க் ஆப் காமர்ஸ் | 14 | 4.21 | 14 | 0.11 | 12 | 0.17 |
| பஞ்சாப் தேசிய வங்கி | 292 | 14.01 | 108 | 3.61 | 51 | 1.24 |
| பஞ்சாப் மற்றும் சிந்து வங்கி | 14 | 0.16 | 11 | 2.03 | 15 | 3.85 |
| சிண்டிகேட் வங்கி | 103 | 1 64 | 34 | 2.61 | 231 | 1.32 |
| யூனியன்பேங்க் ஆப் இந்தியா | 83 | 0.67 | 88 | 1.96 | 82 | 1.53 |
| யுனைடெட் பேங்க் ஆப் இந்தியா | 28 | 0.12 | 59 | 2 99 | 50 | 0.55 |
| யூகோ வங்கி | 58 | 0.73 | 59 | 0.50 | 37 | 2.26 |
| விஜயா வங்கி | 47 | 0.25 | 33 | 0.15 | 14 | 0.15 |
| மொத்தம் | 2157 | 68.93 | 1773 | 44.12 | 1902 | 42.93 |

அண்மையில் மாநிலங்கள் அவையில் வெளியிடப்பட்ட தகவல் நாட்டுடைமை ஆக்கப்பட்ட வங்கிகளில் மட்டுமே 1837 மோசடிகள் நடந்துள்ளன எனக் கூறுகிறது. இவற்றில் பாரத ஸ்டேட் வங்கியில் 607, கனரா வங்கியில் 135, பாங்க் ஆப் இந்தியாவில் 135 மோசடிகள் நடந்துள்ளன.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஏழைகள் இப்படி வாழ்கிறார்கள்!

ஏழைகளை மெல்லச் சாகடிக்கவே சில நுகர் பொருட்கள் தயாரிக்கப் படுகின்றன!

உணவு, உடை, உறையுள் இந்த மூன்றிலுமே தெரிந்தோ, தெரியாமலோ ஏழைகள் ஆபத்தான பொருள்களைப் பயன்படுத்துவது வறுமையால் வற்புறுத்தப்படுகிறது.

புழுத்த கல்மலிந்த அரிசியையும் கூறுகட்டி விற்கும் சொத்தைக் காய்கறிகளையும் புகைகக்கும் அடுப்பில் சமைப்பது அன்றாட நிலை கதிரியக்கத்தால் பாதிக்கப்பட பருப்பு வகைகள் மிக மலிவாக ஏழைகள் சந்தையில் விற்கப்படுகின்றன மாக்கல்லிருந்து தயாரிக்கப்படும் பால்கோவா, மோசமான முறையில் பன்றி நெய்யிலிருந்து தயாரிக்கப் படும் அல்வா போன்றவை சந்து முனைகளில் மலிவான இனிப்புகளாக ஏழைகளின் தலையில் கட்டப்படுகின்றன. ஏழை சிறமிகள் "காட்பரிஸ் மில்க் சாக்லேட்" விளம்பரத்தை வேண்டுமானால் பார்க்கலாம். சாப்பிட வேண்டுமானால் ஈமொய்க்கும் கமர்கட்டு அல்லது மூசுண்டை தான் சாத்தியம்.

உணவில் மட்டுமல்ல, உடையிலும் இதே நிலைதான். காற்றை உட்புக விடா மட்ட நைலான் துணிகள், தோலில் புண் ஏற்படுத்தும் மட்டரக கவரிங் நகைகள் உடம்பைச் சூடாக்கிப் பல கோளாறுகளைத் தோற்றுவிக்கும் பிளாஸ்டிக் செருப்புகள் போன்ற எண்ணற்ற சாதனங்கள் ஏழைகளுக்காகவே வியாபாரிகளால் தயாரிக்கப்படுகின்றன;

பல ஏழை இல்லங்களில் 'ஆஸ்பெஸ்டா ஷீட்டுகள், கூரைகளிலும் கதவுகளில் பயன் படுத்தப்படுவதோடு, ஏழைத்தொழிலாளர் பணிபுரியும் இடங்களிலும் இவை பெருவாரியாகக் காணப்படுகின்றன இவை வெளி நாடுகளில் தடைசெய்யப்பட்டவை காரணம் இவற்றால் புற்று நோய் ஏற்படலாம், இந்திய அரசு வணிகர் நலனையும், வரி வசூல் நலனையும் கருதி இவற்றைத் தடைசெய்யாமலிருப்பது பாதகமாகும். அரசுகட்டும் குடிசை மாற்று வீடுகள் கான்கிரீட் சேரிகளாகவே காணப்படுகின்றன. பல இடங்களில் கட்டடம் எந்த நேரமும் இடிந்து விழும் அபாயத்தில் உள்ளது. குளிக்கவும் குடிக்கவும் கோடி கிருமிகள் நெளியும் தண்ணீர் கிடைக்கவும் பஞ்சம்.

இந்திய ஏழைகள் மாதிரி உலகில் வஞ்சிப்படுபவர்கள் வேறெங்கும் உண்டா? எல்லார்க்கும் எல்லாம் கிடைப்பதாகச் சொல்லும் இலட்சணம், இதுதானா? எல்லார்க்கும் எல்லாமும் ஒரே தரத்தில் கிடைக்கச் செய்யாதவரை, சோஷலிசம் புஸ்வாணமே!

—எழில்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# தண்ணீர் பிரச்சனை பொய்!

இந்தியாவில் ஓராண்டு பெய்யும் பருவ மழைநீர் முழுவதையும் சேகரித்தால் இந்தியா முழுவதையும் ஒரு மீட்டர் உயரத்திற்கு நீரால் நிரப்பலாம். உலகில் எந்த நாட்டிலும் இந்த அளவு (ஆண்டுக்கு 320 மில்லியன் ஹெக்டேர் மீட்டர்) மழை பெய்வதில்லை.

இவ்வளவு மழை பெய்தும் இந்தியாவில் எப்போதும் தண்ணீர் பிரச்சனை, வறட்சி, பஞ்சம். ஏன்?

இந்தியாவில் 3 அல்லது 4 மாதங்களிலேயே 95% மழை கொட்டி விடுகிறது. 100 செ. மீ மழை பெய்தால் 20 செ. மீ அல்லது 30 செ. மீ தவிர மீதி மழை நீர் கடலில் கலந்து விடுகிறது. மழை நீர் கடலில் கலக்காமல் தேக்கி வைக்க நம் பொறியியல் வல்லுநர்கள் அறிந்த ஒரே உத்தி அணை கட்டுவதுதான். மேலை நாடுகளைப் பின்பற்றி அணைகட்டுதல் இங்கு ஒத்துவராது. அங்கு ஆண்டு முழுவதும் மழை பெய்யும். நீர் ஆவியாவதும் அதிகமில்லை நம் நாட்டில் மழை பெய்வதில்லை. கொட்டுகிறது. கொட்டும் பேய்மழையில் அடித்து வரப்படும் வளமான வண்டல் மண் அணையின் அடிப்பகுதியில் படிந்து பயன்படாமல் போவதுடன் அணையின் கொள்ளளவும் குறைகிறது.

இதைத் தவிர்க்க ஓரிடத்தில் பெய்யும் மழை முழுவதையும் வீணாக்காமலும் அவ்விடத்தைவிட்டு வெளியேறாமலும் ஏரிகள் அமைத்து அதில் நிரம்பச் செய்தால், சேகரிக்கப்படும் மழைநீரின் அளவும் அதிகமாகும். படியும் வண்டல் மண்ணை வாரி மீண்டும் நிலத்தில் போடலாம். நம் முன்னோர்கள் ஏரிக்கரைகளில் மரங்களை நட்டு வைத்தனர். இவற்றின் இலைகள், கிளைகள் தண்டு, வேர்கள் ஆகியவை நீர் ஆவியாவதைத் தடுத்து பூமியினைடியில் தேக்கி வைக்கும்.

இவ்வாண்டு வானியல் ஆராய்ச்சித் துறையில் உலகளவில் பரிசு பெறும் இந்தியரான டாக்டர் பி. ஆர். பிஷாரோதியின் கருத்துக்களே மேற்கூறியவை.

என்று தீரும் நம் தண்ணீர்ப் பிரச்சனை? இதற்கு டாக்டர் பிஷாரோதியின் பதில்; நமது குடியரசுத்தலைவர், பிரதமர், மத்திய மாநில அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தண்ணீர்ப் பிரச்சனை தீரும்வரை மாதத்தில் இருமுறை 36 மணி நேரம் தொடர்ச்சியாகத் தண்ணீர்க் குடிக்காமல் "நீரில்லா ஏகாதசி" விரதம் கடைப்பிடிக்கவேண்டும் அப்போதுதான் "நீரில்லாத் திண்டாட்டம்" என்றால் என்ன என்பது அவர்களுக்குப் புரியும்.

—நிலா

FREE E - BOOKS , www.thamizham.net.,

மருத்துவம்:

# உடல் பருமனா? அஞ்சுக!

உங்கள் மார்பளவை விட, மிகுதியாக உங்கள் வயிறளவு இருந்தால் -மிகுதியாக இருக்கும் ஒவ்வொரு அங்குலத்திற்கும் உங்கள் வாழ்நாளில் இரு ஆண்டுகள் குறைகின்றன.

இந்தியரின் சராசரி ஆயுள் 54,உங்கள் மார்பளவு 34," வயிறளவு -38" எனில் 54லிருந்து எட்டு ஆண்டுகள் கழித்துக் கொள்க. நீங்கள் நிச்சயமாக 46 வயதில் இறந்து விடுவீர்கள் என்று சொல்ல முடியாது. பல வகை நோய்கள உங்கள் ஆயுளை உறிஞ்சும் வாய்ப்பு உள்ளது என்பதே பொருள்.

எனவே ஊளைச்சதையுடன் பெருத்து இருப்பவர்கள் உடனே ஆவன செய்தாக வேண்டும், மிக எளிதாக வாரத்துக்கு ½ கிலோ வீதம் இளைக்கலாம் கீழ்க்கண்ட பட்டியல்களைக் கவனியுங்கள். அன்றாட வேலைகளில் உங்கள் இழப்பு 1500கலோரி என்றால், 1500கலோரி உணவு உண்ணாமல் 1000கலோரிமட்டும் உண்ணுகள். உணவைக் குறைக்க முடியாதவர்கள் பணிகளைக் கூட்டுங்கள் வாரத்துக்கு 3500 கலோரி பற்றாக்குறை உணவு என்றால் சுமாராக ½கிலோ உடல் எடையை அது குறைக்கும்.

**அன்றாடம் செலவாகும் கலோரிகள் (ஒரு மணிக்கு)**

வீட்டுவேலைகள் (பெருக்குவது, தூசிதட்டுவது) -350; துணி துவைப்பது-100; குளிப்பது-100: மாடிப் படிகளில் ஏறி இறங்கல்- 800; ஆபீஸ்வேலைகள்-200 சமையல்-350, உடற்பயிற்சிகள்-500; நாட்டியம்-600 பாடுவது-50; மெதுவாக ஓடுதல்-600; வேகமாக ஓடுதல்-900; மெதுவாக நடத்தல்-200; வேகமாக நடத்தல்-300; நீச்சல்-530; மெதுவாக சைக்கிள் விடல்-300 ; வேகமாக சைக்கிள் விடல்-600; கால்பந்தாட்டம்.600; டேபிள் டெனிஸ்.270; டெனிஸ்-200 பாட்மிட்டன்.400; கூடைப்பந்து.600

**உணவில் பெறும் கலோரிகள்:**

இட்லி(2)-135; பூரி(2)-100, சப்பாத்தி(2)-200, ரவாஉப்புமா (1டீகப்)-230; 30கிராம் அரிசிச்சோறு (1டீகப்)-100, சாம்பார் 1கப்-60, பருப்பு ரசம் 1கப்-30 தயிர்-1கப்-160; மோர்1டம்ளர்-80, பால்-100மிலி(ஏடு எடுத்தது)-75, காபி-200 மி.லி (சர்க்கரையுடன்)120; டீ-(பால்சர்க்கரையுடன்)-120; வாழைப்பழம்-1-100; ஆப்பிள்-1-85; போர்ன்விட்டா, ஹார்லிக்ஸ்(200-மி.லி, பால் சர்க்கரையுடன்)-150, ஆரஞ்சு-1-50; 100கிராம் கீரை அல்லது காய்கறிகள்-30 உருளை வாழை (1கப்)-150; அவித்த முட்டை-90; வேர்க்கடலை (50கி)250; ஸ்வீட்-(லட்டு, மைசூர்பாகு, கு. ஜாமூன்)-400, சாக்லெட் (30கி)-140; வெண்ணெய்-(1மேசை கரண்டி) - 100; சர்க்கரை - 1தேக்கரண்டி - 25; பாட்டில் பானங்கள்-100

-சித்தன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# துக்ளக்கை மிஞ்சும் ராஜீவ்

××××××××××

27வது தடவையாக அமைச்சரவையில் மாற்றம் செய்திருக்கிறார் ராஜீவ். அண்மையில் வெளியிட்டிருப்பது 28வது பட்டியல். உலகில் அதிகமான அளவில் அமைச்சரவை மாற்றம் செய்து கின்னஸ் புத்தகத்தில் ராஜீவ் இடம் பிடிப்பது உறுதி!

துக்ளக் என்ற சொல் பழையதாகி விட்டது. குழப்பத்திற்கும், கோமளித்தனத்திற்கும் புதுப் பெயர் ராஜீவ். ஆதாரப்பூர்வமான கீழ்க்கண்ட புள்ளி விவரப்பட்டியலில் இந்த உண்மையை விளக்கும்:-

| | | |
|---|---|---|
| 1. | மத்திய மந்திரி சபையில் மாற்றம் | 27 |
| 2. | மத்திய மந்திரி சபையில் சேர்க்கப்பட்ட மற்றும் நீக்கப்பட்ட மந்திர்கள் | 95 |
| 3. | கடந்த நாலரை ஆண்டுகளாக ஒரே இலாக்காவில் இருக்கும் அமைச்சர்கள். | 2 |
| 4. | மாற்றப்பட்ட மாநில முதல்வர்கள் | 19 |
| 5. | முதல்வர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு மத்தியமந்திரி சபையில் சேர்க்கப்பட்டவர்கள் | 8 |
| 6. | மத்திய மந்திரி பதவியிலிருந்து நீக்கப் பட்டு முதல்வராக்கப்பட்டவர்கள்... | 10 |
| 7. | பதவிக்காலம் முடியும் முன்னதாக மாற்றப்பட்ட ஆளுனர்கள் | 14 |
| 8, | பதவியிலிருந்து நீக்கப்பட்ட அ. இ. கா. க, பொதுச் செயலாளர்கள் | 19 |
| 9. | மாற்றப்பட்ட பிரதேச காங்கிரஸ் கமிட்டி தலைவர்கள்— | 43 |

## சுட்டி முன் இதழ்கள்

100 மாத சுட்டி இதழ்களில் நீங்கள் படிக்காமல் விட்ட முன் இதழ்களையும் படிக்கலாமே! இதழ் எண்கள் : 1, 3, 4, 5, 7, 9, 19, 21, 22, 70 தவிர மற்ற 90 இதழ்களை அனுப்ப இயலும். இதழுக்கு 50 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை(M. O) அனுப்பினால் அஞ்சலில் வந்து சேரும். மொத்தமாக 90 இதழ்களையும் பெற ரூ 40/- அனுப்பினால் போதும்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இராதாகிருஷ்ணனின் மனைவி

முன்னாள் குடியரசுத்தலைவர் இராதாகிருஷ்ண னின் மகன், திரு. கோபால், தம் தந்தையின் வாழ்க்கை வரலாற்றை அண்மையில் ஒளிவு மறைவின்றி எழுதியுள்ளார்.

இந்நூலின் ஒரு பகுதியில் தம் தாய்க்கு, தம் தந்தை இழைத்த அநீதிகளைக் குறிப்பிட்டுள்ளார். இதைப்படிக்கும் போது, இந்தியாவின் மாபெரும் தத்துவஞானி, மனிதாபிமானி, தமது சொந்த வாழ் வில் பெண்ணினத்தை மாசுபடுத்திய அவலம் நம்மை வேதனைப் படுத்துகிறது:-

சிவகாமு பூர்வீகக்கல்வி பயின்றவர்; தெலுங்கு மட்டுமே அறிந்தவர், கல்கத்தாவில் இருந்தபோது, இராதாகிருஷ்ணன் பயிற்றுநர்களை அமர்த்தி அவ ருக்கு ஆங்கிலம் பேசவும்,எழுதவும் கற்பித்தார். தம் ஊக்கத்தாலும், மனவலிமையாலும், முறையாக உயர்கல்வி கற்றவர்களுக்கு இணையாகச் சிவகாமு தம்மை வளர்த்துக் கொண்டார். கணவனின் தராதரத்திற்கு ஏற்ப உயர்ந்தார். கணவனே தமக்குச் சகலமும் என்றிருந்தார்.

எனினும் இராதாகிருஷ்ணன், வேறு பெண்களின் உறவுகளை நாடி, தம் மனைவியை அந்நியப் படுத்திய போது, மனைவி என்றநிலையில் அவரால் தம் பணியை ஆற்றமுடியாவிட்டாலும், தாய் என்ற பதவியில் ஆறுதலடைய முயன்றார்.

இராதா கிருஷ்ணனின் வைப்பாட்டி வலிய சண் டையிடும் இயல்பும், வெறுப்பிற்குரிய தன்மை களும் கொண்டவர். நாற்பதுகளில், இந்த வைப் பாட்டி, நாணங்கெட்ட முறையில் இராகிருஷ்ண னின் வாழ்வில் தன் பங்கை வெளிக் காட்டமுயன்ற போது, சிவகாமு சொல்ல முடியா வண்ணம் மனம் உடைந்து போயிருந்தார். இவரது சோகமும், கண வரின் துரோகமும் வெளி உலகிற்குச் சிறிதும் தெரிந்துவிடா வண்ணம் சிவகாமு காப்பாற்றியதற்கு அவர் தன்மானமே காரணம்.

தம் திருமணம் அடியோடு உடைந்து போகா விட்டாலும், அது சிதைந்து போயிருப்பதை அவர் உணர்ந்து கொண்டார். எனினும் இறுதிவரைக் கண வரிடம் கொண்டிருந்த மாசற்ற பற்றே, அவர் தொடர்ந்து உயிர் வாழ்வதற்கு அடித்தளமானது. விவரிக்க முடியா மனத்துயரங்களும், கணவர் மேல் கொண்ட உரிமையும், கடைசி காலத்தில் திடீர் சீற் றங்களாக அவரிடமிருந்து வெளிப்பட்டன ''மீண்டு மொரு வாய்ப்புக் கொடுத்தாலும், அவர் மனைவி யாக இருக்கவே ஆசைபடுவார் என் தாய்'' என்று நம்புகிறார் மகன் கோபாலன்.

—இசு

FREE E - BOOKS , www.thamizham.net.,

சென்னைப் பல்கலைக் கழகத்தில் சமீபத்தில் நடந்த கல்லூரி முதல்வர்கள் மாநாட்டில் இரண்டு "அரசாங்க அதிகாரிகள்" கல்வியின் தரம் குறைந்ததற்குக் கல்லூரி ஆசிரியர்களே காரணம்'' என்று வாய் கிழியப் பேசியிருக்கிறார்கள். இந்த அதிகாரிகளுக்குக் கல்லூரி ஆசிரியர்கள் மீது ஏன் இந்தக் கோபம்?

கல்வியின் தரம் குறைந்து போனது. ஒப்புக் கொள்வோம். ஆனால் கல்விக்காக எந்த மாணவனும் நேரடியாக கல்லூரிக்குள் குதிப்பதில்லை. பள்ளியில் படித்து, பின்னர் கல்லூரி வரும் அம்மாணவனுக்கு, ஒரு தொடர்ச்சி போல் தான் கல்லூரியில் பாடம் போதிக்கப்படுகிறது. பாடம் நடத்துவது கல்லூரி ஆசிரியர்களின் கடமை. அதை முன் வைத்துத்தான் கல்லூரி ஆசிரியர் சங்கங்கள் இயங்குகின்றன.

சில கல்லூரிகளில் மாதச் சம்பளத்தை 10ஆம் தேதிக்கு முன்னர் நிர்வாகங்கள் அனுமதிப்பதிலை. இதனால் ஆசிரியர்கள் வகுப்பைவிட்டு வெளியேறி விடுகிறார்களா என்ன.? தங்கள் கடமையை இத்தனை தொல்களுக்கு நடுவே செய்துகொண்டுதாம் இருக்கிறார்கள். சில கல்லூரிகளில் மாணவர்களைக் கட்டுப்படுத்தி, கல்விச்சூழலில் அவர்களை வளர்ப்பதிலும் கல்லூரி ஆசிரியர்கள் சங்கம் கவனம் செலுத்தி, கட்டுப்பாட்டை வளர்த்தே வருகிறது மாணவர் சங்கங்களால் அரசியல் தலையீடு இருப்பதால் "கட்டுப்பாடு'' குறைகிறது என்பதையும் அரசு உணர வேண்டும். பணிப்பாதுகாப்பு இன்மை, தாமதமாகும், சம்பளம், நிர்வாகத்தினரின் அடக்குமுறை, இந்த கொடூரங்களின் பிடியில் சிக்கிக் கொண்ட போதிலும், கல்லூரி ஆசிரியர்கள் கடமையாற்றத் தவறுவதேயில்லை. சில கல்லூரிநிர்வாகங்களின் முரட்டுப்பிடியில் இருந்துகொண்டு ஆசிரியர்கள்படும் இன்னல்களைச் சொல்லமுடியாது. அரசுக் இதைக்கவனிக்கவில்லை. நிர்வாகங்களைத் தட்டிக் கேட்டு, நீதி கிடைக்க அரசு வழி செய்வதில்லை. ஆனால் குறை கூறச் சொன்னால் இந்த அதிகாரிகள் ஆசிரியர்களைப் பிடித்துக் கொண்டு உலுக்குவார்கள். ஓரளவுக்கு பல்கலைக்கழக ஆட்சிக்குழு செனட் பேரவைகளிலும் ஆசிரியர்கள் இடம் பெற்று இருக்கிற காரணத்தால் தான், ஓரளவேனும் கல்வித்தரம் பேணப்படுகிறது. மேலாக, சேலம் சௌடேஸ்வரி போன்ற கல்லூரி நிர்வாகர்களைத் தட்டிக்கேட்க முடியாத இந்த அரசுகளும், அதிகாரிகளும், கல்லூரி ஆசிரியர்களைப் பற்றிப் பேச எந்த யோக்கியதையுமே அற்றவர்கள்.

—இரா. விஜயராகவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# அய்ன்ஸ்டைனும் பிள்ளையாரும்

அந்த இளம் அய்ன்ஸ்டைன் கையில் அவரது குடும்ப நண்பர் மாக்ஸ்டால்மி சில புகழ்பெற்ற விஞ்ஞான. கணித புஸ்தகங்களைத் திணித்தார். கண்களை அகல விரித்துப் படித்த அய்ன்ஸ்டைனுக்கு பைபிள் கதைகளெல்லாம் உண்மையாக இருக்க முடியாது என்று பட்டது.

சநாதன நம்பிக்கைகள் தன்னிடம் மறைந்ததால் குழம்பிய நிலையில், ஒரு லயத்தைத் தேட முற்படுகிறார். இது யூதர்களுக்கே உள்ள குணாதிசயமாகும். பிரபஞ்ச வடிவமைப்பில், லயத்தையும், ஓர் ஒழுங்கையும் காண்பது யுத மதத் தத்துவத்தின் அடிப்படையாகும். எனவே, அயன்ஸ்டைன் மனதில், மதத்தின் இடத்தை விஞ்ஞானம் ஆட்கொண்டது. ஆனால் தம் முதுமைப் பிராயத்தில். இரண்டையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகக் கருதலானார்.

தன் வாழ்வின் நோக்கமென்ன என்பது அந்த இளம் அய்ன்ஸ்டைனுக்குப் புரிந்து விட்டது. ஒரு நாள் அவர். யூத தத்துவ ஞானி மார்ட்டின் ப்யூபருடன் பேசிக் கொண்டிருந்தார். ப்யூபர், அய்ன்ஸ்டினின் நம்பிக்கையைப் பற்றி மிகவும் பூடகமாகக் கேட்டார். பதில் பிரவாகமாக வெளி வந்தது: ''எங்கள் (பௌதிக ஞானிகள்) முயற்சியெல்லாம் "அவன்'' வரைந்த கோடுகளைத் தேடுவதாகும், முடிந்தால் வரைந்து பார்ப்பதாகும்.''

ஒரு தடவை, பென் குரியன் கடவுள் நம்பிக்கையைப் பற்றிக் கேட்டபோது, அந்த மனுஷர், ஜடத்துக்கும், சக்திக்குமுள்ள உறவை தன் அற்புதமான சமன்பாட்டில் கண்டவர், சொன்னார்: ''இச் சக்திக்கெல்லாம் அப்பால், அவைகளின் புலமாக ஏதோ இருக்கத்தான் வேண்டும்.''

ஆனால், ஒன்றை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அய்ன்ஸ்டைனின் 'கடவுள்' வெகுஜனங்களின் கடவுள் அல்ல. சென்ற மாத பிள்ளையார்ச் சதுர்த்திநாள் என் நினைவுக்கு வருகிறது! ஊரில் எவ்வளவு பிள்ளையார்கள்! அரச மரத்தடிப் பிள்ளையார், குளக்கரைப் பிள்ளையார் என்று இந்த ஆயிரக்கணக்கான பிள்ளையார்களுடன் ஏகப்பட்ட ஒப்பந்தங்கள். இவ்வளவு தோப்புக் காரணம், இவ்வளவு தேங்காய் கொழுக்கட்டை இத்தியாதி, இத்தியாதி— பிள்ளையாரையே இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872, செக்‌ஷன்களில் மடக்கி விடுகிறோம்! நம் கடவுள், ஓர் ஒப்பந்தக்காரர். ஆனால், அய்ன்ஸ்டைனின் 'கடவுள்' வேறு. இந்த மாயப் பிரபஞ்சத்தின் அற்புதமான கட்டுமானமே, விதிகளே. அவைகளின் வெளிப்பாடே அவரது கடவுள்!

-ரமேஷ்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பாலியல் கற்பிப்பது யார்?

பிறந்த குழந்தையை வளர்ப்பதில் பெற்றோர் காட்டும் கவனம். அக்குழந்தை பருவம் அடையும் போது இன்னும் அதிகமாகக் காட்டப்படல் வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு உண்மையான அன்பும் வழிகாட்டலும் கொண்ட வாழ்க்கைக் கல்வி தேவைப்படுகிறது.

பெண்கள் பருவமடையும் போது சில தாய்மார் கள் குடும்ப கௌரவம் கருதி அவர்களுக்குச் சில அறிவுரைகளையும், கடைப்பிடிக்க வேண்டிய சுகா தார பழக்கங்களையும், எச்சரிக்கைகளையும் உடற் கூறு மாற்றங்கள்பற்றிய தமது கருத்துக்களையும் எடுத்துரைக்கின்றனர். இவை பெரும்பாலும் மரபு வழி வருபவை. பெரும்பாலான தாய்மார்கள் விஞ் ஞானபூர்வமாக தமது பெண்களுக்கு வழிகாட்ட இயலாதவர்களாக இருக்கின்றனர்.

பெண்குழந்தைகள் விஷயத்திலாவது பெற்றோர் கள் ஓரளவு பொறுப்புடன் நடந்து கொள்கின்றனர். ஆனால் ஆண் குழந்தைகளுக்கும் பருவம்அடை யும்போது தேவையான அடிப்படை அறிவைத்தர வேண்டியது தமது கடமையெனப் பெரும்பாலான பெற்றோர்கள் உணருவதேயில்லை. பள்ளிகள், கல்லூரிகளும் இதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. அப்படித் தப்பித் தவறி எந்தக்கல்வி நிறுவனமாவது இத்துறையில் சரியான அறிவைப்புகட்ட முன்வந் தாலோ சமுதாய எதிர்ப்பிற்குப் பயந்து பின்வாங்கி விடுகிறது.

விளைவாக நமது இளைஞர்களும், இளம்பெண் களும் சிலதரந்தாழ்ந்த நண்பர்கள், திரைப்படங்கள் மற்றும் ஆபாசப் பத்திரிகைகள் இவை மூலம் நலங் கெடுக்கும் பழக்க வழக்கங்களையும் தரந்தாழ்ந்த கருத்துக்களையும் அர்த்தமற்ற பயங்களையும், மூட நம்பிக்கைகளையும் தமக்குள் வளர்த்துக் கொண்டு விடுகின்றனர். இதனால் இவர்களது இளமை வீணாவதுடன், கவனம் சிதைந்து ஆக்கப் பூர்வமான எந்தச் செயலையும் இவர்கள் செய்ய இயலாதவர்களாகி விடுகின்றனர், இவர்களே எதிர் காலத்தில் பெற்றோர்களாகும் போது இவர்களது குழந்தைகளும் இவர்களைப் போலத்தானே உருவாகும்?

முனைப்புடன் குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றித் திட்டம் தீட்டி பிரச்சாரம் செய்யும் அதே வேளையில் சரியான பாலியல் கல்வியைப்போதிக்க வேண்டியதன் அவசியத்தையும் சம்பந்தப்பட்ட வர்கள் எண்ணிப்பார்ப்பார்களா?

—நிலா

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி

O 100 நாள் ஆட்சி நடத்தி விட்டு, 100 நாள் படத்தை ஓட்டிவிட்டு ஆர்ப்பாட்டம் செய்யும் இந்த நாட்டில் சுட்டி 100 மாதங்களைக் கடந்திருப்பது பெரிய சாதனை தான். அதற்காக நீங்கள் எடுத்துள்ள 3 மாத ஓய்வும் தேவைதாம்

–எஸ். எஸ். மணி, திருவனந்தபுரம்

O 100வது இதழ் சுட்டியை மிகவும் பொடி எழுத்தில் அச்சிட்டுக் கொஞ்சம் வயதான வாசகர்கள் படிக்க முடியாதபடி 'புண்ணியம்' செய்திருக்கிறீர்கள். இதழ் நஷ்டத்தில் நடக்கிறது. பக்கத்தைக் கூட்ட முடியவில்லை. எனவே எழுத்தின் அளவைப் பொடியாக்கி நிறைய செய்தி கொடுக்கிறோம் என்ற உங்கள் கருத்தும் நிலையும் சரியில்லை, தயவு செய்து பக்கம் 17-இல் உள்ள அளவிலாவது அச்சிடுங்கள். இல்லையென்றால் சுட்டியுடன் ஒரு பூதக் கண்ணாடியையும் அனுப்பி வையுங்கள்.

–க. சண்முகம், கிருஷ்ணகிரி.

(உங்கள் வேண்டுகோளை இந்த இதழ் முதல் நிறைவேற்றுகிறோம் - ஆர்)

O கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்ததில் ஏற்பட்ட சாதனை மலைப்போ மூன்றுமாத ஓய்வு!ஓய்வு என்பது வேலை செய்யாமல் இருந்து விடுவதல்ல. பணிகளின் மாறுதலாகும்.

–கி. விமலன், திருப்பத்தூர்.

O காகித ஒட்டத்திற்கும் களைப்பா? உண்மையான காரணத்தை அறிந்து கொள்ள மனம் உறுத்துகிறது. நந்தை போன்ற சமுதாயத்தை ஒரு நல்ல மாறுதலை நோக்கி நகர்த்துவதில் சுட்டியின் பணியும் முக்கியமானது – பாணியும் முக்கியமானது. மூன்றாவது உலக நாடுகளின் இருளைப் போக்குவதில் பூமியின் ஒரு மூலையிலிருந்து சுட்டி ஒளி பரப்புகிறது ஒரு குத்துவிளக்கைப் போல. உழைப்பு உங்களுடையது; ஒத்துழைப்பு எங்களுடையது.

–யு. கே. செங்கோட்டையன், ஈரோடு

O 100 இதழ் ஓடிய களைப்பு சுட்டிக்கு இருக்கத்தான் செய்யும். 10 ஆயிரம், 50 ஆயிரம் இலட்சம் என்றும் இலட்சியம் இல்லாமல் ஓடும் இதழ்களுக்கு இடையில் ஓடுவது சிரமம் தான். புலிபதுங்குவது பாயத்தான்; தயார் செய்து கொண்ட சுட்டி தரமாக வெளிவர என் வாழ்த்துக்கள்.

–பொள்ளாச்சி நசன்.

O முதல் சதம் போட்ட இதழின் முன் அட்டையில் கல்வியை வியபாரமாக்கிய கயவர்களுக்கு சவுக்கடியாக கார்ட்டூன் வெளியிட்ட சுட்டி, இரண்டாவது சதத்தை நோக்கி வீறுநடை போடட்டும்.

–சி. கித்தேரிமுத்து, சென்னை-7

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பாகிஸ்தான்

பாஸ்கிதான் என்றால் தூயநாடு என்று பொருள். பஞ்சாப்(P) ஆப்கானியா(A), காஷ்மீர்(KI), சிந்து(S) என்ற இடங்களின் முதலெழுத்தை ஒன்றிணைத்து, பலுசிஸ்தான் என்ற பெயரைப்போல,பாகிஸ்தான் என்ற பெயரை 1933இல் கேம்ப்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்த இசுலாமிய மாணவர்கள் முதலில் அமைத்தனர்.

1906இல் டாக்காவில் தொடங்கப்பட்ட அனைத்திந்திய முஸ்லிம் லீக், கட்சி 1947இல் முஸ்லிம்களுக்கென தனி நாடு கோரி, பெற்றது. தலைவர் ஜின்னா "இந்துக்கள் வணிகம், கல்வி ஆகியவற்றில் செலுத்தும் ஆதிக்கம், முஸ்லீம்களைச் சுதந்திர இந்தியாவில் வளமாக வாழவிடாது" எனக்கூறி, பிரிவினைக்கு எதிராகத் தலைவர்கள் வைத்த எந்த மாற்றுத்திட்டத்தையும் பிடிவாதமாக மறுத்து, பாகிஸ்தானைப் பெற்றார்.

பாகிஸ்தான் பிரிந்தபோது மனித வரலாற்றில் இதுவரை இல்லாத அளவு சுமார் 1 கோடி மக்கள் குரூரமான வன்முறைகளிடையே இடப்பெயர்ப்பு செய்தனர்.

கிழக்குப் பாகிஸ்தான் பங்களா தேஷாகப் பிரிந்த நிலையில் இன்றைய பாகிஸ்தானின் 7, 96, 095, ச. கி. மீட்டர்களில் சுமார் 10 கோடி மக்கள் வாழ்கின்றனர். ஆட்சி மொழி 8% மக்கள்பேசும் உருதுமொழி. 66% மக்கள் பஞ்சாபியர். 13% சிந்திக்காரர் 97% மக்கள் இசுலாமியர்.

பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான், வடமேற்கு எல்லைப்பகுதி என்று நாடு 4 மாநிலமாகப் பிரிக்கப்பட்டாலும் 75% கிராமத்துமக்கள் பஞ்சாப், சிந்து பகுதியில் தாம் வாழ்கின்றனர். எல்லா பொருளாதார வளமும் இவ்விரு மாநிலத்தில்தாம். 1966 வரை கராச்சி தலைநகர். பின்னர் 750 மைல் வடக்கே உள்ள இசுலாமாபாத் புதிய தலைநகரமாக்கப்பட்டது.

சிந்துசமவெளி நாகரிகம் பாகிஸ்தான் பகுதியில் விளங்கியதை இம்மக்கள் பெருமையாகக் கருதுகின்றனர் இந்தியாவில் நுழைந்த ஆரியர், பாரசீகர், கிரேக்கர், அராபியர், பட்டாணியர் முகலாயர் ஆகிய மக்களின் கூட்டுப்பாதிப்பே பாகிஸ்தான்! எனினும் மத்திய கிழக்கிலிருந்து வந்தவர்களே தங்களை உயர்குடி மக்களாகக் கருதிக் கொள்கின்றனர்

உலகின் 20 ஏழைநாடுகளில் ஒன்றாக பாகிஸ்தான் உள்ளது. தீவிர மத உணர்வும், இராணுவ ஆட்சியும், 1957இல் தீட்டப்பட்ட அறாண்டுத்திட்டமும் வறுமையைப் பாதுகாத்தே வந்துள்ளன. நகரங்களில் வாழும் 72% மக்கள் மிகச்சிறிய வீடுகளுக்குக் கூட வாடகை தர முடியா நிலையில் நடமாடும் குடில்களை அமைத்து நாடோடியாய் வாழ்கின்றனர்.

2-12-88இல் பெனாசீர் பூட்டோ உலகின் முதல் இசுலாமியப்பெண் பிரதமரானார். இவருக்கு பெரும்பான்மை பலம் தேசிய சபையில் இல்லாமையால், பல திட்டங்களை நிறைவேற்ற முடியா இக்கட்டில் உள்ளார்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# குற்றம்செய்யத் தூண்டும் துத்தநாகப் பற்றாக்குறை

சுமார் 5 வார காலத்தில் 46 குற்றங்களைப் புரிந்ததாகப் பிரிட்டனில் 17 வயது இளைஞன் மீது வழக்குத் தொடரப்பட்டது. உடலில் துத்தநாகம் குறைவாக உள்ள காரணத்தால் தான் அவன் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக அவன் சார்பில் எடுத்துக் கூறப்பட்டதன் பேரில் கோர்ட் அந்த இளைஞனை விடுதலை செய்தது.

துத்தநாகப் பற்றாக்குறை இருப்பின் மனோநிலையில் சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. உணவின் மீது நாட்டம் குறையும் எரிச்சல் ஏற்படும், புத்திசாலிகளாக இருந்தாலும் உருவகச் சிந்தனை இருப்பதில்லை. நோய் தொற்றாமல் இருக்க இரத்தத்தில் துத்தநாகம் குறிப்பிட்ட அளவில் பராமரிக்கப்பட வேண்டும். அது குறையுமானால் சாதாரண முகப்பருகூட சீழ்ப்பபடிந்துவிடும்

துத்தநாகம் ஒரு நாளைக்கு 15 மி. கிராம் நம் உடலுக்குத்தேவை. குறிப்பாக மாட்டிறைச்சி, ஈரல் சிறுநீரகம் இவற்றை உண்பவர்களுக்கு இது எளிதாக கிடைத்துவிடும். கீரை, கிழங்குகள் ஆகியவற்றிலும் இது உள்ளது. எனினும் இவற்றிலிருந்து துத்தநாகம் எளிதில் கிரகிக்கப்படுவதில்லை

சமூகக்குற்றங்கள், நடக்காமல் தடுக்க, ஆரோக்கியமான சரிவிகித உணவு எல்லோர்க்கும் கிடைக்கச் செய்ய வேண்டும்; நம் நாட்டில் இது எப்போது சாத்தியமாகுமோ? —தகவல்: தினமணிசுடர்.

---

பாகிஸ்தான் தொடர்ச்சி.........

1980 வரை போதைப்பொருள் என்றால் என்னவென்றே தெரியாதவர்கள் இம்மக்கள். இன்று 10லட்சம் பேர் போதைப்பித்தர்கள். ஜியா ஆட்சியில் போதைப் பொருள் வணிகம் செழித்தது. 4 மில்லியன் டாலர் ஹெராயின் வணிகம் தலைமறைவாக நடந்துள்ளது. இந்த அவலத்தை முற்றிலும் ஒழிக்க பெனசீர் தனி அமைச்சகம் ஏற்படுத்தி தீவிர நடவடிக்கை எடுத்துள்ளார். அரசியல் செல்வாக்கு மிகுந்த போதைப் பொருள் வணிகர்களை அவரால் பிடிக்க முடியவில்லை. தினமும் பிரதமர் அலுவலகத்திற்கு ஓரிரு தொலை பேசி மிரட்டல்கள் வரத்தவறுவதில்லை. இந்தப் போதைப்பொருள் வணிகர்கள் ஒன்றுகூடி, 650மில்லியன் டாலர்களைத் தமக்குள் வசூலித்து இத்தொகையைக் கொண்டு அரசைக் கவிழ்க்கவும் திட்டமிட்டுள்ளனர்.

பாராளுமன்ற ஜனநாயகத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்தும் முயற்சி பெனாசீருக்குப் பெரும் சவாலாக அமைந்து வருகிறது! –உலகப்பன்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

உயிரியல் விந்தை:

# ஈக்கு ஈமச் சடங்கு!



நம்மை வியப்பில் ஆழ்த்தும் உயிரினங்களில் வீடுகளில் காணப்படும் சாதாரண ஈயும் ஒன்று என்பது அதிசயமாக இருக்கிறதல்லவா?

ஈயின் ஆயுள் மிகக்குறைவானது; ஒரு மாதம் அது உயிருடன் இருந்தால் நாம் நூறாண்டு வாழ்வது போல ஓர் அதிசய நிகழ்ச்சி! இந்தக் குறைந்த ஆயுட்காலத்தில் பல தொற்று நோய்களைப் பரப்பும் ஆற்றலுடையது. பத்தேகால் லட்சம் பாக்டீரியாக்களை ஓர் ஈயால் சுமக்க முடியும். இதனால் 30 வகை பாக்டீரியாவால் விளையும் நோய்களை மானிடர்க்கு ஏற்படுத்த முடியும்.

இது இனப்பெருக்கத்திற்காக, மூலைகளிலோ. சந்துகளிலே சென்று உடல் உறவு கொள்வதில்லை, நட்ட நடு அறைதான் இப்பணிக்கு இதற்கு வசதியானது. ஒரு பெண் ஈ, முட்டையிட்ட, ஒன்றிலிருந்து மூன்று நாட்களுக்குள் குஞ்சு வெளியாகும். அதன் பிறகு முழு வளர்ச்சி அடைந்த ஈயாக மாற இரு நாட்கள் போதும்.

ஈ பின்னாலிருந்து தான் பறக்க ஆரம்பிக்கும் ஆனால் பறக்கத் தொடங்கியவுடன் முன்நோக்கி மட்டுமே அதனால் பறக்க முடியும். தாடையே இல்லாத ஈ எப்படித் திடப்பொருட்களை உண்கிறது? ஏற்கனவே உண்ட உணவின் ஒரு பகுதியை வாந்தியெடுத்து, அதனைக்கொண்டு திட உணவைக் கரைத்து, திடப்பகுதியைத் துண்டுகளாக்கி உறிஞ்சும். 4000 கண்களை உடையது ஈ என்றாலும் அதனால் ஒரே திசையில் தான் பார்க்க முடியும். ஈ மிகவும் அசுத்தமானது என்று நாம் நினைக்கிறோம், ஆனால் தனது எச்சிலாலும், "பிரஷ்" மாதிரி மயிராலும் தன்னை அடிக்கடித் தூய்மைப்படுத்திக் கொண்டேயிருக்கும். இந்த மயிரில்தான் பாக்டீரியாக்களும் தொற்றிக் கொள்கின்றன.

ரோமானியக் கவிஞர் வர்ஜில் தாம் செல்லமாக வளர்த்த ஈயின் ஈமச்சடங்கிற்கு இன்றைய மதிப்பின்படி ரூ 10 லட்சம் செலவிட்டிருக்கிறார். சும்மா இல்லை. இதன்வாயிலாகத் தம் நிலத்தைக் கல்லறை நிலம் என அறிவித்து. நிலவரியிலிருந்து விலக்கு பெற்றாராம்.

–புஸ்வாணன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# கவலைதரும் கல்லூரித் தேர்தல்

மாணவர் தேர்தல் நேரத்தில் கல்லூரிகள் குட்டித் தமிழகமாக உருமாறுகின்றன. சாதி, சமய, கட்சி அடிப்படைகள்; அடியாட்கள், மதுபானம், வாக்குறுதிகள், மிரட்டல்கள், அடிதடிகள் போன்ற அனைத்தையும் இங்கும் பரப்பி விட்டார்கள்.

தண்ணீராகப் பணம் செலவிட்டால் தான் இங்கும் வெற்றி பெற முடியும்! ஏது பணம்? கட்சிகளோ அல்லது கட்சியைச் சார்ந்தவர்களோ தாம் இத்தொகையைப் பெரும்பாலும் வழங்குகிறார்கள் இது. கிடைக்காத போது, தம் சொந்தப்பணத்தைச் செலவிடும் நிலையும் ஏற்படுகிறது. எப்படியெல்லாம் பணம் பெற்றுகிறார்கள் என்பதற்கு ஒரு சான்று:

ஒரு மாலை நேரக் கல்லூரி மாணவர்–(ஆம் மாலை நேரக் கல்லூரிகளில்கூட அமர்க்களத் தேர்தல் நோய் பரவிவிட்டது) தம் தேர்தல் செலவுகளுக்குத் தம் தந்தையிடம் பணம் கேட்டிருக்கிறார்.

"இது வீண் விரயம்; தரமாட்டேன்" என்று தந்தை மறுக்க, "என் சொத்தைப் பிரித்துக்கொடு" என்று மகன் உரிமைப்போரிட்டு, சொத்தையே இதற்காகப் பெற்றுத் தேர்தலில் செலவிட்டிருக்கிறார். ஆனால், அவர் தேர்தலில் சொத்தை மட்டுமல்ல, வெற்றியையும் இழந்து பரிதாபகரமாக நிற்கிறார்.

இவ்வாண்டு மாணவர் பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்ற ஒரு புகழ்பெற்ற சென்னைக்கல்லூரி மாணவர் ரூ 45,000 செலவிட்டிருக்கிறார். செலவு விவரம் கிடைத்துள்ளது:-

| | | |
|---|---|---|
| எழுது பொருள், அஞ்சல் செலவுகள் | ரூ | 5,000 |
| அன்பளிப்புகள் | ரூ | 12,000 |
| விசிட்டிங்கார்டு, துண்டறிக்கை, சுவரொட்டி | ரூ | 5,000 |
| இரு எதிர் அணி வேட்பாளர்களை வாங்க | ரூ | 6,000 |
| மதுபானம், ப்ளு பிலிம் | ரூ | 4,000 |
| உணவு, காப்பி செலவுகள் | ரூ | 8,000 |
| வெற்றிவிழா விருந்து | ரூ | 5,000 |
| | ரூ | 45,000 |

செலவிட்ட பணத்தைத் திரும்பி எடுக்க, தம் அதிகாரத்தை வைத்துக் கல்லூரி அட்மிஷன் வாங்கக் கொடுத்தல் (ரேட்:ரூ 15,000), கல்லூரி விழாக்களுக்குச் செலவிடப் பணம் வாங்கி, ஒரு பகுதியை அமுக்குதல் ஆகிய வழிகளில் இம்மாணவர் தலைவர்கள் அரசியல் வாதிகளையும் மிஞ்சுவதாகத் தெரிகிறது.

சாக்கடை அரசியல் வாதிகளை உருவாக்கும் கொசுப் பண்ணைகளா கல்லூரிகள்?

—ஸ்டெனிஸ்லாஸ்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நண்பர்களே!

இந்த 101வது இதழ், 100வது இதழில் அறிவித்த படி, பல தடங்கல்களை மீறி இதோ உங்கள் கைகளில் தவழுகிறது!

என்றுமில்லாத அளவு நாடெங்கும் உள்ள சுட்டி வாசகர்கள் இந்த 3 மாத கால ஒய்வில் காட்டிய பொறுமையும், நம்பிக்கையும் மகத்தானது. சுட்டியின் மேல் நம்பிக்கை வைத்து, காலத்திற்கு முன்பே கூடச் சந்தாவைப் புதுப்பித்தும், நண்பர்களை அறிமுகப்படுத்தியும் சில வாசகர்கள் பேருதவி புரிந்துள்ளனர்.

சந்தாதாரர்களுக்கு அனுப்பிய வாசகர் கருத்தாய்வு வினாத்தாளை ஆர்வமுடன் பூர்த்தி செய்து அனுப்பியவர்களுக்கு எங்கள் நன்றி. பெருவாரியான வாசகர்களின் கருத்துக்களை, அறிய இந்த வினாத்தாள் உதவியது. இக்கருத்துக்களை மனதிற்கொண்டு இனி சுட்டி செயல்படும்

"சுட்டி வடிவம்" பற்றி வாசகர்களிடம் அழுத்தமான இருவேறுபட்ட (இதேஅளவு, குமுதம் அளவு) எண்ணங்கள் இருப்பது புரிகிறது. நடைமுறைச் செயல்பாடுகளையும், சுட்டி தொடர்ந்து நட்டமின்றி உயிர் வாழ வேண்டிய தேவையையும் மனதிற்கொண்டு, சுட்டி இந்த வடிவிலே தற்போது தொடருவதே சாத்தியமாகிறது. இதனை உணர்ந்து மாறுபட்ட கருத்து உடையவர்களும் இந்த முடிவை ஏற்று ஆதரிக்க வேண்டுகிறோம்.

சுட்டி விற்பனையாளர்கள் பலர், பல வேண்டுகோள்களுக்குப்பின்னும் சரியாகப் பணம் செலுத்தாத காரணத்தால், தவிர்க்க முடியாதபடி அவர்களுக்குச் சுட்டியை அனுப்ப இயலாதவர்களாகிறோம். எனவே பல ஊர்களில் கடைகளில் இனி சுட்டி கிடைக்காது. இவ்வூர்களில் சுட்டியைக் கடைகளில் வாங்கி வந்தோர் அனைவரும் இனி சந்தாதாரர்களாகப் பதிவு செய்து கொண்டு சுட்டியின் வாசகர் குடும்பத்தில் இணைய வேண்டுகிறோம்

சுட்டி தன் வடிவமைப்பையும், அச்சமைப்பையும் மட்டும் நம்பவில்லை. நியாயங்களைத் துணிவுடனும், கூர்மையுடனும் சொல்லும் நேர்மையான எழுத்துக்களில் தாம் சுட்டி வாழ்கிறது. இப்பணியை முன்பைவிடச் சிறப்பாகச் செய்ய, புதிய அமிலத்தைப் பேனாவில் நிரப்பிக்கொண்டு சுட்டி புறப்பட்டு விட்டது

இந்தப் பயணத்தில் கைகோத்து வர வாசக நண்பர்கள் நிச்சயம் துணை நிற்பீர்களல்லவா? உங்களை மட்டுமே நம்பி வழிப்பயணம் தொடரும்! பிற உங்களிடமிருந்து—

அன்புடன்,
-ஆசிரியர்குழு-

FREE E - BOOKS , www.thamizham.net.,

# அமெரிக்காவில் புகை

O 1964 இல் அமெரிக்காவில் புகைபிடிப்போர் தொகை உச்சகட்டத்தில் இருந்தது. வயது வந்தோரில் 42% புகைபிடித்துவந்தனர். இப்போது இது 33% ஆகக் குறைந்துள்ளது சிந்தனைக்குரியது.

O என்றுமில்லாத அளவுக்கு அமெரிக்கத் தொழிற்சாலைகளிலும், அலுவலங்களிலும் புகை பிடித்தலுக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

புகை பிடிக்கும் தொழிலாளி ஆண்டுக்கு ஆயிரம் டாலர் நட்டம் ஏற்படக் காரணமாகிறான். வேலை நேரத்தில் 6%ஐ புகை பிடிக்கும் சடங்கில் செலவிடுகிறான். 50% மற்றவர்களைவிட மிகுதியாக மருத்துவ விடுப்பு எடுக்கிறான். எனவே பல தொழிலகங்கள் புகை பிடிக்காதவர்களுக்கு சிறப்பு போனஸ் கொடுப்பதோடு, புகைபிடிப்பவர்களுக்கு தண்டனையும் வழங்க முன் வந்துள்ளன

O பணியாற்றும் இடங்களின் பொது அரங்குகள், லிப்டுகள் போன்ற இடங்களில் புகை பிடித்தலுக்குத் தடை விதித்தல் நாளுக்கு நாள் மிகுந்து வருகிறது. புகை பிடிக்காதோர் புகைஞர்களை ஒதுக்கி வைக்க முன் வந்துள்ளனர். இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் ‘புகை பிடித்தல்’ பற்றிய திட்டவட்டமான சட்டங்களை எல்லா அமெரிக்க நிறுவனங்களும் கடுமையாக நடைமுறைப்படுத்தவிருக்கின்றன.

O “ஆஷ்டிரே”களை வைக்கும் பழக்கத்தை பல இடங்களில் நிறுத்தி வருகின்றனர்; இது புகை பிடிப்போரை வரவேற்கும் சின்னம். வேண்டா வெறுப்பாகவே புகை பிடிப்போரை வரவேற்கும் நிலை வளர்கிறது. பல இதழ்கள் புகை விளம்பரங்களை வெளியிட தடை விதித்துள்ளன. கணிப்பொறிகளுக்குப் புகை, கடும் பகையாகும். எனவே புகை பிடிக்காதோரைக் காப்பாற்ற மட்டுமன்றி, மிக நவீன எந்திரங்களைப் பாதுகாக்கவும் புகை பிடிப்போரை அப்புறப்படுத்தி வருகின்றனர்

O அமெரிக்க மருத்துவத் தலைவர், புகைபிடித்தல் நிச்சயம் கேடு பயக்கும் என்ற அதிகாரப் பூர்வமான தேசிய எச்சரிக்கை விடுத்து 20 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் ஸ்டைலாக புகை பிடிக்கும் விளம்பர கதாநாயகர்களின் மேல் உள்ள கவர்ச்சி மக்களுக்கு மங்கி மறைந்து வருகிறது.

வளர்ந்த நாடுகள் எங்கும் புகைபிடிப்போர் தொகை விரைவாகக் குறைந்து வருகிறது. இந்தியாவில் மிகுந்து வருகிறது.

**–சித்தன்**

FREE E - BOOKS , www.thamizham.net.,

## அற்புதமான பள்ளிகள் உங்களுக்கா?

"எப்படித்தான் இவர்களை ஹோம் ஒர்க்செய்ய வைக்கப் போகிறேனோ"

"டீச்சரை சொல்லிக் குத்தமில்லே. 60, 70 பிள்ளைகளை ஒருடீச்சரரலே எப்படிச் சமாளிக்க முடியும். எப்படி ஒவ்வொருத்தரையும் கவனிக்க முடியும்?"

"நல்ல ஒழுக்கம், சுகாதாரமான சூழ்நிலை சரியான மாணவர் ஆசிரியர் விகிதம், இவற்றோடு தினம் ஹோம் ஒர்க் கொடுக்காத பள்ளி எங்கேயாவது இருக்கிறதா?"

**அம்மாதிரி பள்ளிகள் இதோ:-**

பெங்களூர் எல்லையில் உள்ளது அதிதி பள்ளி. இங்கே வீட்டுப்பாடமே கிடையாது. ஓர் ஆசிரியருக்கு 8 மாணவர்கள்தான். மழலைப் பள்ளி முதல் 10ம் வகுப்பு வரை உள்ளது. ஒரு வகுப்பில் அதிக பட்சம் 25 குழந்தைகள் சிறு வகுப்புகளில் சுய பாடத்திட்டமும் 10ம் வகுப்பில் அரசுத்தேர்வுக்குப் பயிற்றுவிக்கும் பாடத்திட்ட முறையும் பின்பற்றப் படுகிறது.

உங்கள் குழந்தைக்குப் பரிட்சைன்னா பயமா.? கவலையே வேண்டாம். டெல்லியில் அமிரம்பிகான்னு ஒருபள்ளி இருக்கு; இங்கேவகுப்பு மாற்றும் தேர்வுகளே கிடையாது; பரபரப்பு என்பதே இல்லை. இங்கேயும் ஒரு வகுப்பில் அதிக பட்சம் 15 அல்லது 20 குழதைகள் தாம்.

சென்னையில் கூட திரு ஜே. கிருஷ்ணமூர்த்தியின்" தி ஸ்கூல்" என்ற பள்ளி அடையாறில் உள்ளது. இங்குக்கூட மேற்படி வசதிகள் எல்லாம் உண்டு.

இப்பள்ளிகளில் உங்கள் குழந்தைகளைச் சேர்க்க ஆசையா இருக்கா! இப்பள்ளிகளில் இடம் கிடைக்க குழந்தை பிறக்குமுன்பே பொழுது விடியுமுன்பே க்யுவில் நிற்கத் தேவையில்லை. மாதாமாதம் ரூ 500 முதல் ரூ 1000 வரை பள்ளிக் கட்டணம் செலுத்தினால் போதும். மற்ற செலவுகள் தனி.

"அடடா என்ன போயிக்கிட்டேயிருக்கீங்க. அப்ளிகேஷன் பார்ம் வேண்டாமா?."

—நிலா

FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டிப் புதுக் கவிதைப் போட்டியில்
இரண்டாம் பரிசு பெறும் கவிதைகள்:

## ரப்பர் மரத்திற்கு ரணங்கள் புதிதல்ல-3

* * * * * * * * * * * * * * *

நான் ஒரு மானுடன்,
மனிதர்களை நேசிப்பவன்;
வெள்ளை வியர்வையையும், சிவப்புக் குருதியையும்
என்னுள் சேர்த்து வைத்திருக்கிறேன்.
வர்க்க கத்திகள் என்னைக் கிழிக்கும்போது
அந்த நெடிய ரப்பர் மரத்தைப் போல,
சிந்தனைத் துளிகளைச் சிதறுகிறேன்;
என் ஆன்மாவை நீங்கள் காயப்படுத்துவதால்
நான் ஜடமாகிப் போய்விடமாட்டேன்;
கீறினால் திரவம் கக்கும்
ரப்பர் மரத்தைப் போல
உழைத்தால் பெருகும் வியர்வைத் துளிபோல
உங்களுக்காக
எழுத்துக்களை ஈன்று கொண்டேயிருப்பேன்;
நான் மானுடன்; மனிதனை நேசிப்பவன்,

—தி. குமார்—

## ரப்பர் மரத்திற்கு ரணங்கள் புதிதல்ல-4

நச்சுக்கனியை
எச்சிற்படுத்திய ஏவாள் தொடங்கி
நேற்று எரிந்துபோன
ரூப் கண்வர் வரையில்,
மானுடம் நடந்த தடங்களில்
ஒடுங்கிய ஒரு பக்க சுவடுகளில்
தேங்கும் குருதியும், அவமானமும்...
ஆதிக்க முளைதனில் அறைப்பட்டு
வட்டம் சுற்றியது போதும்!
வலியும்
தொடை நெரிக்கும் விலங்கும்
நமக்கு அந்நியமல்ல
வா, தோழி!
நடக்க நடக்கத் தொலையாத
நெடு வழியுண்டு - நம்
ஜன்னல் சட்டத்திற்கப்பாலும்
வானம் உண்டு.

— க. மோகனரங்கம்

FREE E - BOOKS , www.thamizham.net.,

மேடைப்பிழிவு:

## தமிழ்க்கல்வி இயக்கம் தேவையா?

"குறளாயம்" இதழின் சார்பாக 1-9-89 அன்று "சென்னையில் தமிழ் வழிக்கல்வி இயக்கம் செயற்பாட்டுக் கருத்தரங்கம்" நடைபெற்றது சொற்பொழிவாற்றியவர்கள் உணர்வுப்பூர்வமாகவும், அறிவுப்பூர்வமாகவும் வெளியிட்ட கருத்துக்கள் சில:

❁ எந்த ஆங்கிலம் நம் கண்ணைத் திறந்ததோ அதுவே இன்று கழுத்தை நெரிக்கிறது

❁ 130 ஆண்டுகளுக்கு முன்பே ஈழத்தில் மருத்துவக் கல்வியை ஆங்கிலத்தில் சொல்லிக்கொடுத்தார்கள். ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் பணியாற்றும் தமிழ் ஈழ மருத்துவர்கள் தமிழில் மருத்துவம் பயின்றவர்கள் தாம்.

❁ இங்குத் தமிழ் ஆசிரியர்களின் குழந்தைகளும் தமிழக அரசியல்வாதிகளின் குழந்தைகளும் கூட ஆங்கிலத்தையே பாட மொழியாக ஏற்றால் யார் தான் தமிழில் கற்பது?

❁ தமிழ் வழிக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கு ஒரு கூடுதல் ஊக்கத் தொகை வழங்குங்கள். தாய்மொழிக்கல்வியைப்பரப்பமுயலும் தாய்லாந்தில் இப்படித்தான் செய்கிறார்கள்.

❁ தமிழில் மட்டும் தான் கல்வி என்றால், இந்திய அரசியல் சட்டத்தில் இதற்கு எந்தத் தடையும் கிடையவே கிடையாது. தமிழில் கல்வியைக் கொண்டு வர மத்திய ஆட்சியினரா அல்லது இந்திக்காரர்களா தடுத்தார்கள்?

இந்தக் கருத்தரங்கிற்கு சென்றுச் வந்தபின் ஏற்பட்ட கோபமான கேள்வி தமிழ்க் கல்வி இயக்கம் தேவையா? என்பது தான்.

இதுதமிழ்நாடு! இங்கே நடப்பது போர்ச்சுகீசியர் ஆட்சியோ, முகலாயர் ஆட்சியோ அல்ல! தமிழ் தமிழ் என்று வாய்கிழிய மேடையெங்கும் கடந்த அரைநூற்றாண்டாக முழங்கி வரும் திராவிட இயக்கத்தினர்கள் ஆட்சி! தமிழையே மூச்சு விடும் தமிழ் வேள் தமிழினத் தலைவர் தமிழ்க்கலைஞர் கருணாநிதியின் ஆட்சி!

தமிழறிஞர்கள் கூடி இப்படியொரு தமிழ்வழிக் கல்வி இயக்கம் நடத்தி. உணர்த்துமளவுக்கு அப்படியொரு அவலநிலை ஏன் ஏற்பட்டு விட்டது! இருமுறை முதல்வராகும் வாய்ப்புப் பெற்றும் இதனைக்கூடத் தமிழுக்குச் செய்ய முடியாமல் இருப்பதற்கு முதல்வர் பகிரங்கமான விளக்கம் தரமுடியுமா?

–எழில்

FREE E - BOOKS , www.thamizham.net.,

புத்தகப்பிழிவு

# பிச்சினிக்காடு இளங்கோவின் வியர்வைத் தாவரங்கள்

[வெளியீடு: மீரா பதிப்பகம், கணேஷ் நகர் 4-ஆம் வீதி புதுக்கோட்டை-622 001, விலை – ரூ20]

**கல்வி**

*பரதம்*
*பயின்று*
*முடமாகும் நடனங்கள்*

**நிலவு**

*மின்கட்டணம்*
*இல்லா*
*விண்சார விளக்கு*

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

*புயலைப்*
*பிரசவித்த*
*தென்றல்*

**பாரதி**

*எல்லைகளே*
*இல்லாத*
*நீலவானம்*

**பாரதிதாசன்**

*புதுவையில்*
*மையம் கொண்டு*
*வீசிய*
*மொழிப்புயல்*

**ரணம்**

*அலையில் கரும்பைச்*
*சக்கையாய்ப் பிழிகிறார்கள்*
*சர்க்கரையாய் வருகிறது*
*அலையில் எங்களையும்*
*சக்கையாய் பிழிகிறார்கள்*
*அக்கறையா வருகிறது?*

**நாணயம் நாண**

*காதல் என்பது*
*ஒரு நாணயம்*
*இரண்டு பக்கம்*
*விவாகம்*
*விவகாரம்*
*பூவா தலையா*
*பார்க்கும் போதெல்லாம்*
*விவகாரம் பக்கமே*
*விழுந்து விடுகிறது*
*ஓ!*
*விவாகம் பக்கம்*
*விழுந்து பார்க்க*
*நாணயத்திற்கே*
*ஒரு*
*நாணயம் வேண்டும்*

ஆசிரியர்: மு. ஷேக், வெளியிடுபவர்- கி. இராமச்சந்திரன், அச்சிடுபவர்: எம். எஸ். ரவீந்திரன், ரவீந்திரன்பிரஸ், 137 நடேசன்ரோடு, சென்னை- 600005
முகவரி: 1494, அண்ணாநகர் சென்னை-600040

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இது நடந்த கதை! தொடருமா?

குழந்தை பருவத்திலேயே தன்பெற்றோரை இழந்தவள் மஞ்சுளா. அவளது அண்ணன் அவளை ஒரு பைத்தியகாரனுக்கு மணமுடித்து வைத்தான். கணவன் வீட்டினரது கொடுமைளைத் தாங்க முடியாத மஞ்சுளா பலமுறை தற்கொலைக்கு முயன்றாள் பூச்சிக்கொல்லிகளை உண்டும் கிணற்றில் குதித்தும் தூக்குப் போட்டுக் கொண்டும் அவளால் சாகமுடியவில்லை. கடைசியில் தற்கொலை செய்து கொள்வதைவிட கணவனைக் கொன்று விடுவதே எளிது என்று எண்ணிய மஞ்சுளா ஒரு நாள் இரவு கோடரியால் கணவனைக் கொன்றுவிட்டாள்.

அடுத்த நாள் காலை மஞ்சுளா தன் மாமியாரிடம் தான் செய்ததைக் கூறிய போது அதிர்ச்சியுற்ற மாமியார் "கொலைக்குற்றத்திற்குத் தண்டனை தூக்குமேடை அல்லது ஆயுள் தண்டனை என்பது உனக்குத் தெரியாதா?" என்று கேட்டார்.

உண்மையிலேயே இப்படியொரு தண்டனை பற்றி அறிந்திராத அப்பாவி மஞ்சுளா திகைத்துப் போய், "இக்கொலைக்கு இப்படியொரு தண்டனை என்று தெரிந்திருந்தால் இக்குற்றத்தையே செய்திருக்க மாட்டேனே" என்றாள் கண்ணீருடன்.

"எனக்குத் தெரிந்து எத்தனையோ கணவன்மார்கள் பட்டப்பகலில் அவர்களது மனைவிமார்களைக் கொலைசெய்திருக்கிறார்களே. அவர்களுக்கெல்லாம் இப்படியா தண்டனை கொடுத்தார்கள்? எனக்கு மட்டும் ஏன் இந்தத் தண்டனை?" என்று விசும்பினாள்

ஆனால் நீதிமன்றம் இம்மாதிரிக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லாது.

இந்த மஞ்சுளா இன்று ஜெய்ப்பூர் மத்தியசிறையில் கடந்த 9 வருடங்களாக ஆயுள் தண்டனை அனுபவித்து வருகிறாள். ஆயுள்தண்டனை முடிந்து வெளிவரும்போது இச்சமூகம் என்னை மன்னிக்க வேண்டும் என்று எதிர்பார்கிறேன் "என்று கூறுகிறார். மேலும் "எத்தனையோ பெண்கள் நம் அரசாங்கத்தினலேயே கொல்லபடுகின்றனர் ஆனால் இந்த அரசாங்கத்திற்கு என்ன தண்டனையை, வழங்குகிறார்கள்?" என்று கேட்கும் இவள் "என் பெற்றோர்களும் என்னை ஏற்றுக் கொள்ளாவிடில் நான் பிச்சை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்று கூறுகிறாள்.

குற்றங்களைச் சமுகமே உருவாக்குகிறது. தனி மனிதன் குற்றங்களை உருவாக்குதில்லை அவன் குற்றங்களைச் செய்பவனாக மட்டுமே இருக்கிறான்.

தகவல்: இல்லஸ்டிரேடட் வீக்லி-நிலா

FREE E - BOOKS , www.thamizham.net.,



# அன்னை தெரசா செய்வது சரியா?

அன்னை தெரசா யூகோஸ்லோவியா நாட்டில் பிறந்தவர். இந்தியாவின் ஏழை மற்றும் ஆதரவற்றோர் நலனுக்காக இந்நாட்டில் தங்கி, குடியுரிமையும் பெற்று தம் வாழ்வை அர்ப்பணித்து வருபவர். 70 பள்ளிகள், 265 மருத்துவக் கூடங்கள், 58 தொழுநோய் இல்லங்கள், 23 மனநலமற்றோர் மருத்துவமனைகள் ஆகியவற்றை நடத்தி வருபவர். எல்லாம் மேன்மையான செயல்களாகவே தோற்றமளிக்கின்றன. ஆனால்—

அன்னையின் சேவை ஏழைகளை எப்போதும் ஏழைகளாக வைத்திருக்கவே உதவும்! கொடுக்கும் கரங்கள் கெடுக்கும் கரங்கள் என்பதே உண்மை. ஒரு பொறுப்புள்ள அரசு தம் மக்களுக்கு உணவு, உடை, உறையுள், கல்வி, மருத்துவம் இவற்றை வழங்கியாக வேண்டும். வழங்கத் தவறும் போது இந்த அடிப்படை உரிமைகளை அரசு தவராமல் வஞ்சிப்பதை உணர்ந்து, பாதிக்கப்பட்டோர் குமுறி எழுவார்கள். அப்படி எழமுடியாத நிலையில் இருப்போரை ஒன்றிணைத்து, உரிமைக்காகப் போராட வைப்பதே நியாயமான, சரியான சமூக சேவையாக இருக்கமுடியும்.

சிக்காகோவிலுள்ள சிஸ்டர் போயர் என்ற கிறித்துவக்கன்னிகை "மக்கள் ஏன் வறுமையால் வாடுகிறார்கள் என்ற வினாவை அன்னை எழுப்புவதேயில்லை. ஏழைக்கு, மீன் தருகிறாரே தவிர மீன் பிடிக்கக் கற்றுத் தருவதே நிரந்தர விடிவு என்பதை உணர்வதில்லை" என்று விமர்சித்தார். அதற்கு அன்னை" நான் இன்றைய நாளுக்காக உழைக்கிறேன். அவர்கள் நாளைக்காகத் திட்டமிடுகிறார்கள்" என்று பதிலளித்தார். திட்டமிடாது, ஏழ்மையில் குளிர் காயும் அரசுகளும், ஏழ்மையை வளர்க்க விரும்புவோரும் அன்னைக்குப் பேராதரவு தருவது கவனிப்பிற்குரியது.

ஏழைகள் இந்தியாவிக்குத் தேவை! ஆம் அரசியல்வாதிகள் ஏழ்மையை போக்குவதாகச் சொல்லி ஓட்டுக்கேட்க; பணமுதலைகள், ஏழ்மையைப் பயன்படுத்திச் சுரண்டிக் கொழுக்க! பஞ்சமா பாதகர்கள் தர்மம் செய்து பாவ விமோசனம் பெற!

இந்த ஏழ்மையை அன்னை தெரசாவும் அழிக்க விரும்பாமல், பாதுகாத்து வளர்ப்பது சரியா?

—நிலா

FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டி மாத இதழ்: பதிவு எண்: TN/MS(N) 317

நேர்முகம்:

# புதுக் கவிதையில் சிறுகதைகள்

**கேள்வி:**

அழியாக் காவியங்களை உருவாக்குகின்ற பலம் புதுக்கவிதைக்கு உண்டா?

**மு. மேத்தா:** எந்தக் கவிதையில் எழுதுகிறோம் என்பதை வைத்து நிலைத்தன்மையைச் சொல்ல முடியாது. எதை எழுதுகிறான், எழுதுகின்ற கவிஞர் யார்? அவன் எப்படி எழுதுகிறான் என்பதை வைத்துத்தான் படைப்பின் தன்மை நிலைபெறும்.

புதுக்கவிதையில் அழியாக் காவியங்களைப் படைக்க முடியாது என்று சொல்லுகின்றவர்கள், எங்கே மரபு அழிந்து போய் விடுமோ என்று கவலைப்படுகிறவர்கள் தாம். மரபை யாரும் அழித்து விட முடியாது. புதுக்கவிதைகளில் சிறுகதைகள் வந்துள்ளன, நாவல்கள் வந்துள்ளன, மகத்தான காவியங்களும் நிச்சயம் வரும். நானே எழுதலாம். அல்லது மற்றவர்களும் எழுதலாம். அப்படியொரு உயர்வு புதுக்கவிதைக்கு உண்டு. அந்த நம்பிக்கையோடு தான் நான் காத்திருக்கிறேன், நானும் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

**கேள்வி:** எந்த இலட்சியத்திற்காக நீங்கள் எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்? எதிர்காலத்தில் கவிதைத் துறையில் நீங்கள் சாதிக்க விரும்புகின்ற சிறப்பு என்ன?

**மு. மேத்தா:** இந்த நூற்றாண்டு என்று எண்ணிப் பார்க்கின்ற போது என்னுடைய பெயர் மட்டுமே ஞாபகத்திற்கு வர வேண்டும். அப்படி பெரிதாக எதையாவது சாதிக்க வேண்டும் என்கிற ஆசை இருக்கிறது.

என்னுடைய கவிதை மனிதர்களுடைய சிறகுகளாக மாறி, அவர்களை வானத்தில் பறக்கின்ற வல்லமை உள்ளவர்களாக ஆக்க வேண்டும்.

என்னுடைய கவிதை வெறும் இலக்கிய இரசனைக்குரியதாக இல்லாமல். மனிதனின் மேன்மைக்கான போராட்டக் கருவியாக மாற வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

அனைத்து அஞ்சல் தொடர்புகளுக்கும்:
''சுட்டி''
அஞ்சற் பெட்டி எண்: 6888 சென்னை-600 040
**ஆண்டுச்சந்தா: ரூ 12/-**
எந்த மாதமும் சந்தாதாரராகலாம்

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழகம்

FREE E - BOOKS , www.thamizham.net.,